முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1063

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.08.2022**, சனிக்கிழமை

1. மாதர்ம வேலிகொண்ட அரங்கனே
   மக்களை மீட்கவந்த தேசிகனே
   பூதலத்தில் எந்தன்பால் மாதவம் செய்து
   புண்ணியவழிகளை தேர்ந்தெடுத்து வந்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் ஆவணி மாதம் 11 நாள், 27.08.2022 சனிக்கிழமை)
   வரங்களாக என்சக்தி உன்னுள்ளே
   வல்லமைபட சர்வபலமாய் நிரம்பி இருக்க
3. இருக்கவே அரங்கன் உன் சொல் செயல் அனைத்தும்
   இந்த உலகை காப்பது உறுதி உறுதி
   தயவாக உன் வழி வரும் தொண்டர்களே
   தலைமை ஏற்று இந்த உலகை காப்பது உறுதி உறுதி
4. உறுதிகொண்டு அரங்கன் நீ சொல்பவர்க்கே
   உலகத்தில் ஞானிகளாகும் வாய்ப்பும் ஆசியும்
   ஆறுமுகன் என்னருளால் வாய்க்கக்கூடும் அப்பனே அரங்கன் உன் மாதர்ம வழியை
   ஆதரித்து எவரெல்லாம் சேவை ஆற்றுகின்றாரோ
5. ஆற்றுகின்ற மக்களெல்லாம் இந்த கலியுகத்தில்
   ஆற்றல்பட ஞானிகளாகி மேன்மை காணக்கூடும்
   கூடவே அற்புதத்தை உன்னுள்ளே
   குருவாக உலகிற்கு யான் இருந்து நடத்துகின்றேன்
6. திருவருள் பெற எண்ணும் மக்களெல்லாம்
   தேசிகனை கண்டு வந்தால் போதுமப்பா
   அப்பனே சடுதி ஞானயுக மாற்றமாக அரங்கனால் ஞான ஆட்சிக்காலமாகவும்
   வரமென என் சக்தி மூலமாக வையகம் கண்டு அமைதிகாண நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–